வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.221/20

வழக்கு சாட்சி - அ.சா.6

| | |
|---|---|
| பெயர் சுகந்தி | ஜாதி |
| தந்தைபெயர் | தொழில் |
| கிராமம் | சமயம் |
| தாலுக்கா | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.23

**(** எதிரி ஆஜர்**. )**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது தேனி அரசு க.விலக்கு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணிமருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.5.20 ம் தேதி நான் தேனி அரசு க.விலக்கு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்த போது இரவு 9.15 மணிளவில் 45 வயது மதிக்கதக்க முருகன் என்பவரை அவரது மனைவி முருகேஷ்வரி என்பவர் அவரை அன்று இரவு 8 மணிக்கு தெரிந்த ஒரு ஆண் நபர் தனது வீட்டில் வைத்து தன்னை தாக்கியதாக கூறினார். அவரை விசாரித்த போது எதனால் தாக்கப்பட்டார் என்று கூறமறுத்துவிட்டார். நான் அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது. அவை 1) இடது பக்கவாட்டு மார்ப்புக்கு அருகில் வெட்டுகாயம் 3x2x3 cm அளவில் காணப்பட்டது. 2) இடது பக்கவயிற்றின் கீழ்புரத்தில் வெட்டுகாயம் 3x2x4 cm அளவில் காணப்பட்டது. 29.5.20 அன்று மேற்படி நபர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். 6.6.20 ம் தேதி சிகிச்சை முடித்து அனுப்பப்பட்டார். அவருக்கு சிகிச்சை வழங்கிய அறுவை சிகிச்சை மருத்துவரின் கருத்துப்படி அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்று அசாஆ.3. அருவாளால் வெட்டினால் மேற்படி காயம்ஏற்பட வாயப்புஉண்டு என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வீட்டிற்குள்ளோ, வெளியிலோ நிலைதடுமாறி விழும் போது கூர்மையான பொருட்களின் மீது விழும் போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.